(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **227**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2017 திசெம்பர் 04, திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**அதிமேதகு மைத்திரிபால சிறிசேன,** இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசின் சனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சரும் மகாவலி மற்றும் சுற்றாடல் அமைச்சரும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சரும்

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ துமிந்த திசாநாயக்க,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாஸ,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் லால் கிரேரு,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பாலித ரங்கே பண்டார,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த சேணாநாயக்க,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** நிதி மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ பாலித குமார தெவரப்பெரும,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ ஆனந்த அலுத்கமகே

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி

கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்

கௌரவ சந்திரசிறி கஜதீர

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ எட்வட் குணசேகர

கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ

கௌரவ நலின் பண்டார ஜயமஹ

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ லக்கி ஜயவர்தன

கௌரவ க. துரைரெட்ணசிங்கம்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ எம்.எஸ். தௌபீக்

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ முஹமட் நவவி

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ கே.கே. பியதாஸ

கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே. காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண

**கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ துலீப் விஜேசேகர**

**கௌரவ ஹேஷான் விதானகே**

**கௌரவ ச. வியாழேந்திரன்**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ எம்.எச்.எம். சல்மான்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சாபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்,— “பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ரொசான் ரணசிங்க 2017 நவம்பர் மாதம் 23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம் தொடர்பில் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துவதற்கான பிரேரணையொன்று கொண்டு வரப்படலாம்.”

**2. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை வங்கியின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. மனுக்கள்:**

(1) நாவலபிட்டிய, சொய்சா கலே, 04 ஆம் ஒழுங்கை, இல. 26/6 இல் வதியும் திரு. சி.எம்.எம். சம்சுதீனினது 2017.09.13 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஆனந்த அலுத்கமகே சமர்ப்பித்தார்.

(2) கண்டி, லேவெல்ல வீதி, சுதந்திர மாவத்தை, இல. 12/30 இல் வதியும் திரு. ஜே.எம். மஹிந்த ஜயசுந்தரவினது 2017.07.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. ஒதுக்கீட்டு (திருத்தம்):** நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த பிரேணை,— 2016 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2017 திசம்பர் மாதம் 11 ஆம் திகதி திங்கட்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாறும், அச்சிடப்படுமாறும் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**5. குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்):** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரும் நீதி அமைச்சருமானவர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த பிரேணை,— 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2017 திசம்பர் மாதம் 11 ஆம் திகதி திங்கட்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாறும், அச்சிடப்படுமாறும் உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**6. ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2018)** — (ஒதுக்கப்பட்ட பத்தொன்பதாவது நாள்) : குழு ஆய்நிலையில் மேலும் பரிசீலனை.

(குழுநிலையில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்,

தலைப்பு 111

நிகழ்ச்சித்திட்டம் 01 (மீண்டுவரும் செலவினம்)

"நிகழ்ச்சித்திட்டம் 10/- ரூபாவினால் குறைக்கப்படுமாக" என கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ பிரேரித்தார்.

(மு.ப. 10.52 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.09 மணிக்கு கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி தலைமை தாங்கினார்.)

(பி.ப. 3.01 மணிக்கு கௌரவ முஜிபுர் ரஹுமான் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 4.06 மணிக்கு கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்கினார்.)

(பி.ப. 6.40 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

111 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 118,176,198,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 01 (மூலதனச் செலவினம்)

111 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 10,812,200,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 02 (மீண்டுவரும் செலவினம்)

111 ஆம் தலைப்பின் 02 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 14,867,350,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 02 (மூலதனச் செலவினம்)

111 ஆம் தலைப்பின் 02 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 32,536,800,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைப்பு 220

நிகழ்ச்சித்திட்டம் 01 (மீண்டுவரும் செலவினம்)

220 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 116,200,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 01 (மூலதனச் செலவினம்)

220 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 10,700,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 02 (மீண்டுவரும் செலவினம்)

220 ஆம் தலைப்பின் 02 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 1,240,250,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 02 (மூலதனச் செலவினம்)

220 ஆம் தலைப்பின் 02 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 640,300,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைப்பு 123

நிகழ்ச்சித்திட்டம் 01 (மீண்டுவரும் செலவினம்)

123 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 252,600,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 01 (மூலதனச் செலவினம்)

123 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 11,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 02 (மீண்டுவரும் செலவினம்)

123 ஆம் தலைப்பின் 02 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 155,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 02 (மூலதனச் செலவினம்)

123 ஆம் தலைப்பின் 02 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 10,106,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைப்பு 309

நிகழ்ச்சித்திட்டம் 01 (மீண்டுவரும் செலவினம்)

309 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 105,950,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 01 (மூலதனச் செலவினம்)

309 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 23,800,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 02 (மீண்டுவரும் செலவினம்)

309 ஆம் தலைப்பின் 02 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 220,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 02 (மூலதனச் செலவினம்)

309 ஆம் தலைப்பின் 02 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 67,700,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைப்பு 310

நிகழ்ச்சித்திட்டம் 02 (மீண்டுவரும் செலவினம்)

310 ஆம் தலைப்பின் 02 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 100,950,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 02 (மூலதனச் செலவினம்)

310 ஆம் தலைப்பின் 02 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 204,500,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“குழு செய்து முடித்த பரிசீலனை பற்றித் தலைவர் சபைக்கு அறிவிப்பதுடன் குழு மீண்டும் கூடுவதற்கு அனுமதி கோருவாராக” என காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

குழு செய்து முடித்த பரிசீலனை பற்றி அறிவிக்கப்பட்டது. 2017 திசம்பர் மாதம் 05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மீண்டும் கூடும்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆம் பிரிவின் கீழ் மருத்துவ உபகரணங்கள் விலைகுறித்தல் தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 ஆகஸ்ட் 04 ஆம் திகதிய 2030/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. அரச மருந்துக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் - 2013:** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2 ) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3 ) ஆம் பிரிவின் கீழ் 2016.07.08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான அரச மருந்துக் கூட்டுத்தாபன ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் - 2013:** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைச் சட்டத்தின் 30 (2 ) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் கீழ் 2016.07.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் - 2013:** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2 ) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3 ) ஆம் பிரிவின் கீழ் 2016.08.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்ட அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் - 2013:** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபைச் சட்டத்தின் 30(2 ) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2 ) (சீ) பிரிவின் கீழ் 2016.08.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்-2013:** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் 2017.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை ஆயுர்வேத மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. ஹோமியோபதி மருத்துவ சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்-2011:** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1970 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஹோமியோபதிச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் கீழ் 2017.01.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2011.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஹோமியோபதி மருத்துவ சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**14. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் - 2012:** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சார்பாக சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்திற்களுக்கமைய 2016.10.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2012.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான வருடாந்த ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**15. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவகத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் - 2013:** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சார்பாக சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழ் மற்றும் 1992 ஜூன் மாதம் 10 ஆம் திகதிய 718/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைக்கமைய 2016.10.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**16. அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் - 2012:** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சார்பாக சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழ் 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2012.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**17. ஒத்திவைப்பு :** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 7.28 மணிக்கு, 2017 நவெம்பர் 15 ஆம் திகதிய சபைத் தீர்மானத்திற்கமைய 2017 திசெம்பர் மாதம் 05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிவரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.